FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364146

1. District : Salem PS: V-AC Year: 2026 FIR No.: 07/AC/2026 Date: 05.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106 BNSS

(ii) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a) and 8

(iii) Act சட்டம்: Act 1988 as amended in 2018. Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 04.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.30 hrs. Time to : 21.15 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 10.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 10.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.06.2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 9 Kms East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : Joint-I Sub Registrar office, Salem East, Udaiyapatti, Salem
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. K. Chitra (b) Father's/ Husband's Name : R. Saravanam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspection Cell Officer, (Salem, Namakkal, Dharmapuri & Krishnagiri Districts) (g) Address : Collectorate, Salem.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. S. Gokulraj, Sub Registrar, Joint-I Sub Registrar office, Salem East.
2) Tr. P. Ravichandran, office Assistant. Joint-I Sub Registrar office, Salem East.
3) Tr. T. Natarajan S/o. K. Thangavel, 1/129, Bari St., Thathampatti, Salem [Private Individual]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed separate sheets

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

SSI VSPAC, Slm

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

5/6/2026

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.06.2026 - 12.00 hrs

Name: பெயர் S. Murugan
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/AC/2026 u/s 106 BNSS and Sec 7 (a) and 8 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் விபரம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 05.06.2026 ஆம் தேதி பகல் 10.00 மணிக்கு சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.K.சித்ரா என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பினவருமாறு: அனுப்புநர் K.சித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம். பெறுதல் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். ஐயா, சேலம் மாவட்டம் உடையாப்பட்டியில் செயல்பட்டுவரும் சேலம் கிழக்கு 1ம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யவதற்காகவும், பொது அதிகாரம் பெறுவதற்காகவும், ரத்து செய்வதற்காகவும், வில்லங்க சான்று பெருவதற்காகவும் வரும் பொதுமக்களிடம் முறையற்ற வகையில் புரோக்கர்கள் மூலம் கையூட்டு பெறுவதாக இன்று 04.06.2026-ம் தேதி பகல் சுமார் 13.30 மணிக்கு நம்பகமான தகவலின்பேரில் 04.06.2026ம் தேதி பகல் 15.30 மணி முதல் மாலை 21.15 மணி வரை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து சேலம் மாவட்டம், உடையாப்பட்டியில் உள்ள பத்திர பதிவுத்துறை துணை தலைவர் அலுவலக கட்டிடத்தில் முதலாவது தளத்தில் இயங்கிவரும் சேலம் கிழக்கு 1ம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது மேற்படி சார்பதிவாளர் அலுவலக ஹாலில் இருந்த திரு.நடராஜன், த/பெ.தங்கவேல் என்பரிவரிடம் இருந்து **ரூ.14,400/-**, அந்த ஹாலின் வடக்கு சுவற்றை ஒட்டி வில்லங்க சான்று வேண்டி விண்ணப்பம் போடும் மேசையின் மீதிருந்த இளம் பச்சை நிற ட்ரேவில் Royal Bullet என்று அச்சிடப்பட்டு Bullet வாகனம் படம் போட்ட அடர் சிமெண்ட், வெள்ளை, மஞ்சள் நிற நைலான் கைப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பணம் **ரூ.2,50,000/-** மற்றும் IDBI Bank காசோலை புத்தகம் எண். 190710200000288 2 ஒன்று, அலுவலக உதவியாளர்

திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் இருந்து **ரூ.5,000/-** மற்றும் அது சம்மந்தமாக விவரங்கள் எழுதப்பட்டுள்ள துண்டு சீட்டு ஒன்று, கணிளி அறையின் 3வது கணினி அருகில் வைக்கப்பட்டிருந்த HP Printer & Scanner பின்புறத்தில் கருப்பு நிற பேனாவால் 15 என எழுதப்பட்ட பிரவுன் நிற கவரில் இருந்து **ரூ.15,000/-**, ஹாலின் தென்கிழக்கு மூலையில் உள்ள பதிவறையை சோதனை செய்தபோது அந்த அறையில் சிமெண்ட் சிலாப்பிள் அடுக்கிவைக்கப்பட்டுள்ள ஆவணங்களுக்கு அடியில் அலுவலக உதவியாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்களால் 3 வெள்ளை நிற துண்டு சீட்டுகளில் கருப்பு மையினால் 01.06.2026, 02.06.2026 மற்றும் 03.06.2026 ஆகிய தேதிகளை குறிப்பிட்டு அதில் ஆவண எண்களையும் அதற்கு எதிராக சில குறிப்புகளும் எழுதி, அலுவலக செலவிற்காக வசூல் செய்து அவர் மறைத்து வைத்திருந்த **ரூ.14,300/-**, சார்பதிவாளர் அறைக்கு வெளியே வந்து வடக்குபக்கமாக போடப்பட்டிருந்த இரும்பு சேருக்கு பின்னால் அமைந்திருந்த போர்ட்டிகோவின் மேல் தளத்தின் இருந்து வெள்ளை நிற கவரில் இருந்து **ரூ.20,000/-** ஆக மொத்தம் **ரூ.3,18,700/-** தொகைகளும் மேற்படி நபர்களால் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தாலும் மேற்படி தொகை இணை-1 சார்பதிவாளர் திரு.கோகுல்ராஜ் அவர்களுக்கு இலஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டுவந்திருக்ககூடும் என்று சந்தேகப்பகிப்பதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது. இத்துடன், திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்டகீழ்கண்ட ஆவணங்களையும், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களையும் இணைத்துள்ளேன்.

1.	அ-கணக்கு பதிவேடு கணினியில் இருந்து பிரிதி எடுக்கப்பட்டு கையொப்பமிட்டு வழங்கினார்.
2.	புகைப்பட கணக்கு / குறுந்தகடு கணக்கு பதிவேடு கணினியில் இருந்து பிரிதி எடுக்கப்பட்டு கையொப்பமிட்டு வழங்கினார்.
3.	எச்-கணக்கு பதிவேடு கணினி பிரதி
4.	உட்பிரிவு கணக்கு பதிவேடு கணினியில் இருந்து பிரிதி எடுக்கப்பட்டு கையொப்பமிட்டு வழங்கினார்.
5.	ரேகைபதிவேடு நகல்
6.	நிலையான முன்பண பதிவேடு நகல்
7.	தனிநபர் தனிஉறையில் வைக்கும் பதிவேடு நகல்

8.	வருகை பதிவேடு நகல்
9.	களப்பணி பதிவேடு நகல்

எனவே, மேற்படி தொகைக்கு பொறுப்பானவர்களான 1) திரு.செ.கோகுல்ராஜ், சேலம் கிழக்கு 1ம் எண் இணை சார்பதிவாளர், 2) திரு.பொ.ரவிச்சந்திரன், அலுவலக உதவியாளர், 3) திரு.த.நடராஜன், த.பெ.தங்கவேல் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். . இப்படிக்கு Sd xxxxxx 05.06.2026 (K.Chitra).

Sir, Received the complaint at 10.00 hrs today on 05.06.2026 and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.07/AC/2026 u/s 106 BNSS and Sec 7 (a) and 8 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 05.06.2026 at 11.00 hrs. Sd xxxx 05.06.2026 S.Murugan, Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with original computer typed complaint of Tmt.K.Chitra, Deputy Inspection Cell Officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Salem and other copies were submitted to the officers concerned.

06/2026

(S.Murugan),
Inspector of Police
V&AC, Salem.